# மருதத்திணைக் கருப்பொருட்களும் பத்துப்பாட்டும்

*முனைவர் மு. ஸ்ரீதர்*
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, திருச்சி
https://doi.org/10.5281/zenodo.15323767

**ஆய்வுச் சுருக்கம்**
*இவ் உலகம் உயிரினங்கள் வாழ்வதற்குத் தகுதியானது என மனிதன் உற்றறிந்தது இயற்கையின் பேராண்மைச் செயலாக்கங்களைக் கண்டுதான். அத்தகைய இயற்கையைத் தனது பேராற்றலால் பண்டைய மனிதன் வென்றெடுத்தான் என்றால் அது மிகை இல்லை. இயற்கையை மனிதன் கைகொள்ள விளையும் நோக்கோடு, நிலத்தையும் பொழுதையும் பயன்படுத்தியதன் வெளிப்பாடே கருப்பொருள்கள் ஆகும். அத்தகைய கருப்பொருள்கள் நானிலத்தின் தாக்கக் கூறுகளில் மருதத் திணைசாற் கருப்பொருட்களை எடுத்துக்காட்டும் நோக்கோடு, இலக்கண (தொல்காப்பியம்), இலக்கியச் (பத்துப்பாட்டு) சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு விளக்கியுரைப்பதே இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***திறவுச் சொல்:*** *பத்துப்பாட்டில் காணலாகும் மருதத்திணைக் கருப்பொருட்கள்*

## முன்னுரை

*பண்டைய காலந்தொட்டே தமிழர்கள், முதல் பொருளான நிலத்தையும் (ஐந்நிலம்) பொழுதையும் (பெரும்பொழுது, சிறுபொழுது) தனதாக்கிக், கருப்பொருட்களைத் தங்களது வாழ்வாதாரங்களாக உருவாக்கிக் கொள்ளும் களமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதோடு இயற்கையை நுட்பமுறக் கையாளும் தங்களது ஆளுமை முயற்சியின் எதிர்விளைவாகப், பொருளாதார மேண்மையின் தன்னிறைவுக்கு வித்திட்ட, தமிழ்ச் சமூகத்தின் மாண்பினைச் சங்க நூல்களும், இக்கண நூலான தொல்காப்பியமும் தொன்று தொட்டு விளம்புகின்றன. ஆகவே நம் முன்னோர்கள் தோற்றுவித்த வாழ்வொழுக்கங்களையும், (திணைசார்) கருப்பொருட்களைக் கையாண்ட முறையினையும், தொல்காப்பிய நூற்பாக்களை முன்னிருத்திப், பத்துப்பாட்டுப் பாடலடிகளைச் சான்றாகக் கொண்டு, மருதத்திணைக் கருப்பொருள்களும் பத்துப்பாட்டும் என்னும் இவ் ஆய்வுக்கட்டுரை விளக்குகின்றது.*

## தொல்காப்பியத்தில் கருப்பொருள்

***தெய்வம் உணாவே மாமரம் புட்பறை***
***செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ***
***அவ்வகை பிறவும் கருவென மொழிப***
***(தொல்.பொருள். 20)***

*தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ், பிரிவுகள், பிறவும் பூ, நீர் என்னும் இவற்றைத் திணைசார் கருப் பொருட்களாகத் தொல்காப்பியர் மொழிகின்றார். நிலமும் காலமும் சிறந்த கருப்பொருட்களாகும். அவை திணவாழ் மக்களின் வாழ்க்கைக்குக் கருவாக அமைகின்றன.*

## கருப்பொருள் - பெயர்க்காரணம்

*மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது நீரும் நிலமும் மற்றும் அவற்றிடமிருந்து பெறப்படும் பொருட்களும் ஆகும். இதனடிப்படையில் கருப்பொருட்களினைத் தொல்காப்பியர் வரிசைப்படுத்தும் நெறிமுறைகள் மற்றும் அதற்கான பெயர்க்காரணங்கள் இங்கு எடுத்துரைப்பது இன்றியமையாததாகக் கொள்ளத்தக்கது.*

மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது உணவு. அதனால்தான் தெய்வத்திற்கு அடுத்து முதலில் உணரீ என உணவை வைத்துள்ளார் தொல்காப்பியர். அவ்வுணவுக்கும் நாகரிகத்துக்கும் துணைபுரிவன அவனைச் சுற்றியுள்ள மா, மரம், புள் முதலியன. அவையாவும் வாழ்விற்குக் கருவாக அமைதலின் அவை கருப்பொருள் எனப்பட்டன.

கருப்பொருட்கள் யாவும் அனுபவப் பொருட்கள், இன்பப்பொருட்கள். தெய்வத்தை முதலாவதாகக் குறிப்பிடுகின்ற ஆசிரியர், மனிதனின் பொறிபுலன்களால் நுகரப்படும் உணவு முதலியவற்றோடு புலன்களுக்கு அப்பாற்பட்ட தெய்வத்தைக் கூறினார். அதனால் தெய்வமும் பொறிபுலன்களால் நுகப்படுவதாக அமையும். எனவே மனிதன் வாழ்வுக்குக் கருவாக அமையும் தெய்வம் முதலியன கருப்பெருள் எனப்பட்டன.

உணவு முதலிய கருப்பொள்கள் கண்ணுக்குப் புலப்படுவன. அவற்றின் தொழில்கள் அவற்றால் நடைபெறும் நடத்தப்பெறும் தொழில்கள் கண்ணுக்குப் புலப்படுவன. ஆனால் தெய்வம் கண்ணுக்குப் புலப்படாதது. ஆனால் அதனால் நுகரப்படும் செய்தியும் புலப்படாதது, புலன்களால் உய்த்துணரப்படுவது. எனினும் மனிதனின் மனத்தை நல்வழிப்படுத்தி ஞானநிலைக்கு ஆட்படுத்துவதற்குத் தெய்வ வழிபாடு இன்றியமையாதது என்பதால், தெய்வம் கருப்பொருளாகக் கொள்ளத்தக்கதாகும். (தொல்காப்பியமும் இலக்கியவியலும், துரை. சீனிச்சாமி - 2013, ப.15)

## மருத்ததிணைக் கருப்பொருள்கள்

மனிதன் நிலத்தில் நிலைபெற்று வாழ ஊன்றுகோலாக்க் கருப்பொருள்கள் திகழ்கின்றன என்பதற்குச் சான்றாகத் திணை நிலங்களில் ஒன்றான மருத்த்திணைக் கருப்பொருட்களைப் பற்றிய விளக்கவுரை இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது.

### தெய்வம்

திருந்திய பண்பட்ட நிலப்பகுதி மருதத்திணை ஆகும். அத்தகைய மருத நிலத்தின் தெய்வம் "இந்திரன்". இதனைத் தொல்காப்பியம்,

> **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
> **(பொருள்.அகம். 5)**

என்கின்றது. மருதநில மக்கள் இந்திரனுக்கு ஆண்டுதோறும் விழா எடுத்ததாகச் (பதினெட்டு நாள்) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பதிவு செய்கின்றன.

> **நூற்றுப் பத்துஅடுக்கிய நாட்டத்து, நூறுபல்**
> **வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து**
> **(திருமுருகு. 155-156)**

என்ற திருமுருகாற்றுப்படைப் பாடலடிகள் இந்திரன் ஆயிரம் வேள்விகள் செய்து, பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன் என்கிறது. அதோடு நான்கு கொம்புகளைப் படைத்த யானையை ஊர்தியாகக் கொண்டவன் (முருகு. 157-159) ஆவான். இந்திரனைப் பற்றிய புராணக் கதைகளைச் சங்க நூல்களும் பதிவு செய்துள்ளன.

### உணவு

மருத நிலத்தில் செழித்து வளரும் உணவுகளாகச் "செந்நெல், வெண்ணெல், கரும்பு" ஆகியவை அடங்கும். செழித்து விளைந்த செந்நெல்லின் திரள்தாளினைப் பெரும்பாணாற்றுப்படை,

> **பைதுஅற விளைந்த பெருஞ்செந் நெல்லின்**
> **தூம்புடைத் திரள்தாள் துமித்த வினைஞர்**
> **(பெரும். 130-131)**

எனக் குறிப்பிடுகின்றது. மேலும் நெற்கூடு - பெரும். 179-182, நெற்பொழில் (பெரும். 240,242-255) சாலி - நெல்வகை (மதுரைக். 86-87) போன்ற பத்துப்பாட்டுப் பாடலடிகள் மருதத்திணை உணவு குறித்து எடுத்துக் காட்டுகின்றன. இதில் மருதத்திணை உணவு குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

### விலங்கு

மருதத்திணை விலங்கினங்களாக, "எருமையும், நீர்நாயும்" அடங்கும். இதனைப் புலப்படுத்தும் இலக்கியச் சான்றுகளாக,

**அள்ளல் தங்கிய பகடுஉறு விழுமம்**
**கள்ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே**
**(மதுரைக். 259-260)**

**தன்கேணித் தகை முற்றத்து**
**பகட்டுஎருதின் பசாலை (பட்டினப். 51-52)**

போன்ற பத்துப்பாட்டுப் பாடலடிகள் மருதநில விலங்கினைக் குறிப்பிடுகின்றது. உழவர்கள் எருதுகளை அடித்து ஓட்டிச்செல்லும் செயலினை மலைபடுகடாம்-469-470 எடுத்தியம்புகின்றது. "எருதும், நீர் நாயும் நீர்வளமிக்க இடத்தில் மட்டுமே வாழும் உடலமைப்புக் கொண்டது". இது மருதநிலத்தின் நீர்வளத்தைக் குறிப்பாக உணர்த்திக் காட்டுகின்றது எனலாம். (சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், பி.எல்.சாமி, 1970)

## மரம்

மருதநிலத்தின் தனித்துவத்தினைக் குறிப்பால் உணர்த்துகின்ற மரங்களாக மருதும் காஞ்சியும் இடம்பெறுகின்றன. இதனைப் பதிவுசெய்துள்ள பாடலடிகளாவன,

**உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டி,**
**கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு**
**(திருமுரு. 27-29)**

இப்பாடலடிகள் மருதமரத்தின் பூங்கொத்துகளைக் குறிப்பிடுகின்றன. மேலும் மருதமரச் சோலையினைப் பொருநர். 179-182 பாடலடிகளும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் மலைபடுகடாம் 499-450 பாடலடிகளிலும் காஞ்சி மரம் இடம்பெற்றுள்ளது.

## புள்

மருதத் திணையினை உறைவிடமாகக் கொண்டு வாழ்வோம்புகின்ற புள்ளினம் அன்றிலும் அன்னமும் மனைக்கோழியும், ஆகும்.

**நேர்இழை மகளிர் உணங்குஉணாக் கவரும்**
**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை**
**(பட்டினப். 22-23)**

இப்பாடலடிகள் வீட்டின் முற்றத்தில் உலர்த்தப்பட்ட நெல்லினைத் தின்னவரும் கோழியை மகளிர் தனது காது குழையைக் கொண்டு விரட்டியதாக எடுத்துக்காட்டுகின்றது. ஊதுகின்ற கொம்பு போல, வலைந்த வாயினையுடைய அன்றில் பறவை என,

**ஓங்கிடும் வண்ணை யகமட லகவ**
**(குறிஞ்சிப். 219)**

என்ற பாடலடி அன்றில் பறவையைக் குறிப்பிடுகின்றது. மேலும் அன்னப்பறவைக் குறித்துக்,

**குறுங்கால் அன்னமோடு உகளும் முன்கடை**
**(நெடுநல். 92)**

என்ற நெடுநல்வாடைப் பாடலடி குறுகிய கால்களைக் கொண்ட அன்னப்பறவை குறித்துக் காட்டுகின்றது. பத்துப்பாட்டுப் பாடலடிகளைச் சான்றாகக் கொண்டு மருத நிலத்தின் புள்ளினங்கள் இங்கு எடுத்துக் கூறப்பட்டன எனலாம்.

## பறை (முழவு)

மருதத் திணைக்கு பறை கிணைப் பறையாகும். இதனை "நெல்லறிப் பறை" என்றும் "தண்ணுமை" என்றும் அழைப்பர். வயல் சார்ந்த தொழில் புரியும்போதெல்லாம் இப்பறை முழக்கப்படும். ஆடல் பாடல்களை நிகழ்த்தவும் மருதநில மக்களின் வழிபாடுகளிலும் இப்பறை முழக்கப்பட்டுள்ளது. இதனைத் தமுக்குப் போடுதல் என்றும் கூறுவர். இதனை,

**ஒலிந்த பகன்றை விளைந்த கழனி**
**வன்கை வினைஞர் அரிபறை**
**(மதுரைக்.261-262)**

என்ற மதுரைக் காஞ்சிப் பாடலடிகள் உழவர்கள் முற்றிய நெல்லை அறுவடை செய்யும்போது தம் கைகளால் பறையடிக்கும் வழக்கம் கொண்டிருந்தமையை உணர்த்துகின்றன. மேலும் மலைபடுகடாம் 471-473, மதுரைக். 99 போன்ற பாடலடிகளும் மருதநிலப் பறை சார்ந்த செய்தியைப் பதிவு செய்துள்ளன.

## தொழில்

மருதநில மக்கள் தங்களது வாழ்வாதாரமாக மேற்கொண்ட தொழில் உழவு (விதைத்தல், விளைவித்தல், கடாவிடுதல்) ஆகும். அத்தகைய உழவுத் தொழிலைப் பதிவிடும் சங்கப் பாடலடிகளாவன,

**அறைக் கரும்பின் அரி நெல்லின்**
**இனக் களமர் இசை பெருக**

**(பொருநர். 193-194)**

மருத நிலத்தில் கரும்பு, நெல்லினை அறுவடை செய்யும் உழவர்கள் என, அத்தொழில் குறித்துப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் பொருநர். 180-182, பெரும்பாண். 229-242, மதுரைக். 110, 260-262 போன்ற பத்துப்பாட்டு நூல்கள் உழவுத் தொழில் குறித்த நிகழ்வினை எடுத்தியம்புகின்றன.

**யாழ்**

மருதத் திணையின் யாழ் மருத யாழ் ஆகும். மருத யாழில் இருந்து இசைக்கப் படுவது "மருதப் பண்" ஆகும். இன்று இதனைக் கரகரப்பிரியா (பண் இசை) என்பர். இப்பண்ணில் தேவாரம் பாடிய மூவரும் பதிகங்கள் பாடியுள்ளனர். மருதப் பண் இலக்கியச் சான்றாக,

**மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்**
**நரம்புமீது இறவாது, உடன்புணர்ந்து ஒன்றி**

**(மலைபடு. 534-535)**

கரிய தண்டினையுடைய சிறிய யாழில், விறலியர் இசைத்துப் பாடியதை மலைபடுகடாம் காட்டுகின்றது. மேலும் மலைபடு. 469-470 என்ற பத்துப்பாட்டு அடிகளும் மருதப் பண் குறித்து விளம்புகின்றது.

**ஊர்**

மருத நில மக்கள் கூடியிருக்கும் பகுதியினை "ஊர்" என்ற பெயரில் அழைத்துள்ளனர். இதனைப்

**புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்**

**(பெரும். 225)**

என்றும் அடி குறிக்கிறது. மருதத்திணை வாழ் மக்களின் குடிலானது வைக்கோலால் (நெற்தாள்) வேயப்பட்டிருக்கும் என இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் பட்டினப். 27-28, 453, பெரும்.354-355, 245-246 போன்ற பாடலடிகளும் மருதத்திணை வாழ் மக்களின் இருப்பிடத்திற்குச் சான்றாக அமைகின்றன. ஒவ்வொரு திணைவாழ் மக்களும் தங்களின் இருப்பிடத்தில் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு தனது குடிலை அமைத்துக் கொண்டுள்ளனர் என அறிய முடிகின்றது.

**நீர்**

மருத நிலத்தினைச் செழிக்கச் செய்கின்ற நீர் நிலைகளாக, ஆற்றுநீர், பொய்கை எனத் தொல்காப்பியம் வரையறுக்கின்றது. இதற்குச் சான்றாகச்

**சிறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த**

**(சிறுபாண். 68)**

என்ற பாடலடி கடம்ப மலர்கள் சூழ்ந்து நிற்கும் நறுநீர்ப் பொய்கை எனச் சிறப்பிக்கின்றது. மேலும் மதுரைக். 171, பெரும்பாண். 292-293, பட்டினப். 38 போன்ற பாடலடிகளும் மருத நில நீர்நிலைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. மருத நிலத்தின் வளமைக்கும் செழிப்பதற்கும் அடித்தளமாக விளங்குவது அந்நிலத்தின் நீர் நிலைகள் தான் என அறிய முடிகின்றது.

**பூ**

மருத நிலத்தினை இடனாகக் கொண்டு மலர்கின்ற பூக்கள் "தாமரை, கழுநீர்" ஆகியனவாகும். இதில் தாமரை குறித்த செய்தியாகச்,

**திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை**

**(சிறுபாண். 73)**

என்ற பாடலடி மருத நிலத்தில் இடனாகக் கொண்டு பொய்கைத் துறையிடத்தே எழுகின்ற தாமரை எனப் பாடலடி விளம்புகின்றது. மேலும் செங்கழு நீர் பூத்த பொய்கை என மதுரைக். 171 பாடலடி உணர்த்துகின்றது. அதோடு திருமுரு. 72-73, பெரும். 287-289, சிறுபாண். 183 போன்ற பாடலடிகள் தாமரை குறித்துப் பதிவிடுகின்ற சங்கப் பாடல்களாகும்.

**மக்கள்**

மருத நிலத்தின் பயன்களை நுகர்கின்ற மக்களின் பெயர்களாக "உழவர் உழத்தியர்" எனப்படுவர். இதற்குச் சான்றாக,

***உரன்கெழு நோன்பகட்டு உழவர் தன்கை***
***(சிறுபாண். 190)***
***புன் ஆடு மகளிர் கதுமெனக் குடைய***
***கூனி குயத்தின் வாய்நெல் அரிந்து***
***(பொருநர். 241-242)***

*என்பன அமைகின்றன. இப்பாடலடிகள் மருதநில மக்களின் பெயரான, ‘‘உழவன் உழத்தியரைக்’’ குறிப்பிடுகின்றன. மேலும் மருத நில மக்களின் பெயரீடு குறித்துப், பொருநர். 179-182, பெரும்பாண். 207-212, மதுரைக். 256-260 போன்ற பாடலடிகளும் எடுத்தியம்புகின்றன. உழவர்கள், களமர் (பொருநர். 194) வினைஞர் என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றனர். இப்பகுதி மருதநில மக்களின் திணை நிலைப்பெயர் குறித்து எடுத்தியம்புகின்றது.*

**நீலம்**

*‘‘வயலும் வயல் சார்ந்த இடமும்’’ மருத நிலமாகும். (தொல்.அகத்திணை, 5) மருதநிலம், ‘‘மென்புலம்’’ எனப்படுகின்றது. இதனைக் குறிப்பிடுகின்ற பத்துப்பாட்டுப் பாடலடிகளாவன,*

***மதிசேர் அரவின் மானத் தோன்றும்***
***மருதம் சான்ற மருதத் தண்பனை***
***(சிறுபாண். 185-186)***

*என்பதாகும். இப்பாடலடிகள் மருத நிலம் குளிர்ந்த வயல் பகுதிகளைக் கொண்டது எனச் சுட்டுகின்றன. மேலும் மருத நிலத் தன்மையினைப், பொருநர். 188-189, 244-248, மதுரைக். 154, பட்டினப். 454-455 போன்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஆகவே மருத நிலம் மென்புலம் என்பதையும், உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் கொண்டது எனவும் உணரமுடிகின்றது.*

**முடிவுரை**

*தமிழர் வரலாற்றை உற்றுநோக்கும் போது, அவர்களின் சொத்துக்கள் என்பன ஆநிரை, நிலவளம் இதனையடுத்து பொன்னும் மணியும் ஆகும். மலை, காடு எனச்சுற்றித்திரிந்த தமிழ்ச் சமூகம் நிலையான வாழ்க்கையை வாழத் துணிந்தது மருத நிலத்தில் தான் என்ற பொருண்மையை செவ்விலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. மருதநில மக்கள் ஆற்றங்கரைக் காடுகளை அழித்து உழவு மேற்கொண்டமைக்கு, அந்நிலக் கருப்பொருள்கள் கருவாகப் பயன்படும் பாங்கினை விளக்கமாக எடுத்துக்காட்டப்பட்டள்ளது எனலாம்.*

**துணைநின்ற நூல்கள்**


1. *தேவநேயப் பாவாணர் ஞா. மொழிஞாயிறு, பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், தமிழ் மண் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை.*
2. *கந்தையா ந. சி. பத்துப்பாட்டு - திரட்டு-1, அமிழ்தம் பதிப்பகம், தியாகராயன் நகர், சென்னை, முதல்பதிப்பு, 2003.*
3. *கரிகாலன் நை.சி. பத்துப்பாட்டு ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, டிசம்பர், 2011.*
4. *கார்த்திகேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம், சென்னை, ஜுன், 2009.*
5. *மாதையன் பெ. சங்ககால இனக்குழுச் சமுதாயத்தின் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், டிசம்பர், 2004.*
6. *பத்துப்பாட்டு (தொகுதி 1,2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.*
7. *சாமி. பி.எல். சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1970.*
8. *சாமி சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், இராயப்பேட்டை, சென்னை, டிசம்பர், 2011.*
9. *சீனிச்சாமி துரை. தொல்காப்பியமும் இலக்கியவியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2013.*
10. *சீனிவாசன் கு. சங்க இலக்கியத்*

*தாவரங்கள், தமிழ் வளர்ச்சி இயக்ககம், எழும்பூர், சென்னை - 600 008, மே, 2011.*

11. *திருமலை அ. முத்துசாமி, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ஔவை வெளியீடு, 4/141, பிராட்வே, சென்னை - 1, ஜுன், 1959.*
12. *தொல்காப்பியம் - பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*
13. *வாணி அறிவாளன், சங்க இலக்கியத் தேடல், தமிழ்க் கோட்டம், 2, முன்னிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, அமைந்தக் கரை, சென்னை, முதல் பதிப்பு, 2009.*
14. *விஜயகாந்த் க., செந்தில்குமார் ம., தீபலட்சுமி த. இலக்கண நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள், புலம் வெளியீடு, திருவள்ளிக்கேணி, சென்னை, முதல் பதிப்பு, மார்ச், 2010.*